Description of Mudeliyar Subcastes Palani Pulavanar, Tiruppur. 23/1/66

1, முதலியார், (செங்குந்தம்)

**கைக்கோளன்.**

1, பெருந்தாலி
2, சிறுந்தாலி
3, தொண்டைகட்டி
4, இரட்டைக்காரர்.

**மோளகாரன்.**

இவர்கள் ஆலயங்களில் பணிசெய்தும், இசைக்கருவிகள் இயக்கியும் வருகின்றனர். இவர்கள்யாவரும், நவவீரர்கள் வம்சவழி. இவர்களும் தங்களைச் செங்குந்தர் என்றே கூறுகின்றனர். தங்களை (மோளகாரன்) என்று சொல்லிக் கொள்ள விரும்பவில்லை.

---

2, — மேற்குறித்த சிறுதாலிகட்டி, பெருந்தாலிகட்டி, ஆகிய முதலியார் வீடுகளில் நடக்கும் திருமணச்சீர்கள்யாவும் கொங்கு வேளாளர் குடும்பம் போன்றவையே. இவர்கள் திருமணங்களில், கொங்கு வேளாளரே வந்து, அருமை எடுப்பர்.

3, — இவர்கள் அன்றி தொண்டை மண்டல முதலியார், என்ற ஒரு வகையாரும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தொண்டைகட்டி முதலியார் என்றும் தங்களை அழைத்துக் கொள்வர். இவர்கள் யாவரும் சைவ உணவு உண்பவர்களே; இவர்கள் இப்பகுதியில் விவசாயிகளாகவும், கணக்கர், மணியம் முதலிய தொழில் செய்தும் வாழ்ந்து வருகின்றனர்.

66

2,

4,— இவர்களையன்றி, இரட்டுக்காரர் என்ற வகையை சார்ந்த முதலியார்களும் உண்டு. இவர்கள் போர்வையெனும் ரட்டு, நெய்த காரணத்தாலோ அல்லது, இவர்களில் பெண்கள் மறுமணம் செய்து கொள்வார்கள் (இரண்டு கட்டு) கட்டுகிற காரணத்தாலோ இரட்டுக்காரர் என அழைக்கப்பட்டனர் போலும்.

இவைகளில் புலவர் என்று சொல்பவர்கள் கைக்கோள முதலியார் பெருந்தாலிகட்டி கூட்டத்தில் சேர்ந்தவர், ஆவர்.